உ

கடவுள் துணை

மதனசுந்தரி ஓடிச்சிந்து



சென்னை

சாண்டவராயபிள்ளைஆ (செ-பீர.)

கிருபாலக்ஷ்மிவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது. 1900

கணபதிதுணை.

மதனசுந்தரி ஓரடிச்சிந்து,

டம்பாச்சாரி.

வண்டுநிகர்விழியாளே மாவமுதமொழியாளே
தண்டையணிகழலாளே தாரணிந்தகுழலாளே
ஆண்டமெதன்துணையாளே அளவிலாவெழிலாளே
மண்டுநடையொயிலாளே மாக்குரலிற்குயிலாளே
    ஒண்டொடியேமாணிக்கமே - என்கண்ணாட்டி
    உனக்கிணைசொல்வதுண்டோடா

மதனசுந்தரி.

ஆசையுள்ளகண்ணாளா அழகியமணவாளா
வாசமணியுயர்தோளா வர்ணமேசோடணிதாளா
வீசுமலர்க்கணைவேளால்வெதுப்பாதேயென்னைவாளா
ஈஸ்வரியேயென்னையாளா-யென்றுநான் வெகுநாளாய்
    பூசனைபுரிந்தேனடா - என்கண்ணாளா
    புஷ்பங்கரங்தொடுத்தே

டம்பாசாரி.

வட்டமணையின்மீது இட்டமுடனிருந்து
தொட்டுகழுத்தில்தாலி கட்டியவென்னுடைய
மட்டிமனைவியெனும் தர்ட்டிச்சனமோ பீச்சை
கிட்டியென்காலினால் எட்டியுதைத்துத்தள்ளி
    உந்தனிடம்வாழ்வதல்லாலென் - கண்ணாட்டி
    யொருவருடன்வாழ்வதுண்டோ

Best copy available

மதனசுந்தரி.

கலிக்கித்துராயழகும் கஸ்தூரிப்பொட்டழகும்
சிலுப்பாமினுக்கழகும் சேர்கிருதாவழகும்
தலைப்பாகையினழகும் சரிகைறுமாலழகும்
நலமாம்வடிவழகும் நடையின்ஓயிலழகும்
கண்டபோதேஎன்னுடைய வென்கண்ணாளா
கருத்தையுருக்குதடா

டம்பாச்சாரி.

வஞ்சியாமிளங்கொடியே மதவாரணப்பிடியே
விஞ்சுமொர்ழிற்பைந்தொடியே மென்மருங்குற்றுடியே
நெஞ்சினிலென்றுங்குடியே நீங்குவனோநொடியே
தஞ்சமுன்மலரடியே தானடைந்தேன்டியே
பஞ்சையென்மனையாளைநான் என்கண்ணேட்டி
பறக்கவடித்திடுவேன்

மதனசுந்தரி.

காட்டிக்கொடுத்ததெய்வம் கருணைபுரிந்ததெய்வம்
நாட்டிலுயர்ந்ததெய்வம் நலம்பெறச்செய்ததெய்வம்
பாட்டிலுயர்ந்ததெய்வம் பணிவிடைசெய்யுந்தெய்வம்
கூட்டிக்கொடுக்குந்தெய்வம் குளிர்முகம்பார்த்ததெய்
கும்பகோணத்தெய்வமல்லவா - என்கண்ணாளா
குலதெய்வம் வேறுசொல்லவா

டம்பன்.

இன்சால்மெண்டாக்டினின்றுந் தப்பித்துக்கொண்

டு மதனசுந்தரிவீட்டுக்குவந்து படுத்திருப்பவளை எழு
ப்ப அவள்பராமுகமாயிருப்பதைக்கண்டுசொல்லுதல்

தேசுலவுமடமானே தெவிட்டாதசெந்தேனே
ஆசையோடுதினம்நானே அடுத்தின்பஞ்செய்தேனே
வேசிகட்குள்உன்னைத்தானேமேலாகநினைத்தேனே
காசினியளித்தேனே கருத்திலறிவானே
வாசமலர்க்குழன்மயிலேகுயிலே
வருத்தமென்னதையலே

மதனசுந்தரிதாயையழைத்து சொல்லுதல்.

பூதலத்தனேகத்தவம் புரிந்தென்னைப்பெற்றவளே
காதலுடனேவளர்த்துக் கரையேற்றிவிட்டவளே
மாதாவேயாரோவோர் மனிதனருகில்வந்து
பாதாரவிந்தம் பணிகுவேனென்றும்
என்கண்ணேபொன்னே யென்னுங்கார்குயிலே
வண்ணக்கலாபமுடை மாமயிலேயென்று
மூச்சிவிடாமல் மொருகுகிறானே
கச்சக்குளிரினால் கனவருத்தமடைந்து
ஐந்தாறுநாளாக அன்னபானமில்லாமல்
சிந்தைநொந்திருக்குமிந்த ஸ்திதியிலெந்தனுக்கு
மாப்பிள்ளையொன்றுதானோ மாநிலத்திலேகுறைவு
தாப்புள்ளசெல்வமெல்லாம் தாறுமாறாகவழித்து
வாரண்டுங்கையுமாக மாட்டிக்கொண்டிருப்பவர்க்கு
தாரண்டுங்குழலுடை தாசிவீட்டுக்கென்னவேலை

பேயனைபபோகச்சொல்லடி-என்னம்மணி
பேசவும்சீவனில்லடி

கிழவி தெம்மாங்கு.

எவனவண்டிஉன்னைவந்து எத்துகிறளியவன்
தவடைதனில்போடாமல் தாமதங்கள்செய்வானேன்

டம்பன்-சிங்காரச்சிந்து.

நா-நா-நன்னானே-நன்னானே-நன்னானே
எந்தனருமைமாமி இன்சால்வெண்டாக்டினில்
என்னுடையவல்லமையால் எளிதில்தப்பித்துவந்தேன்
சொந்தவுன்மருமகனாய் சுந்தரியோடுநான்
சொகுசாகவாழ்ந்திருப்பேன்
சுகமே யினிமேலம்மா

கிழவிதெம்மாங்கு

உனனுடையவல்லமை உண்மையொடு சொல்வதற்கு
என்னுடையநாவாலே எவ்வளவுங்கூடுமோ

சிந்து

அந்தமட்டுக்குங்கெட்டிக்கார ஆண்பிள்ளைதானப்பா
அவனியிலுனக்கிணை யாரைச்சொல்வதப்பா
உந்தனைநாங்கள்கண்டதொரு கோடியுண்டப்பா
உறவினிலெங்களுக்கு உதவாதுடவப்பா.

டம்பாசாரி தெம்மாங்கு.

நன்றிகெட்டகிழப்பிணமே ஞாயமோ நீங்களென்னால்
இன்றுவிட்டசெல்வமெல்லாம் செரித்ததென்றோசிந்தி
[த்தீர்

நாலுலட்சம்விலையுள்ள நகைகள்கொடுத்தேனே
நாலடுக்குமெத்தைவீடு நலமாகக்கொடுத்தேனே
கோலச்சரிகைச்சேலை கொஞ்சமேவளித்தது
குணங்கெட்டிப்படிநீங்கள் கூறினும்போவேனோ

கிழவி தெம்மாங்கு.

பொருக்கிதின்னநாயேநீபுளுகுளங்கேகற்றுகொண்டா
நறுக்கிவிடப்போறார்கள் நகைகள்செய்து தந்தவர்கள்

சிந்து

கபபல்துபாசியாலே காப்புக்கிடைத்ததடா
கனகராயவேளாலே கண்டிகிடைத்ததடா
அப்பாராவுவேளாலே மற்றதெல்லாங்கிடைத்ததடா
அறிவுகெட்டோனேயுன்னால் அணுவுமறியோமடா

டம்பாசாரி தெம்மாங்கு

பலதினமுமுங்களைநான்பட்சமுடன்காத்ததெல்லாம்
இலவுதனைக்காத்திருந்த வேழைக்கிளிபோலாச்சே

சிந்து

அன்பின்மிகுமெந்தன் அழகுமனையாளை
அரிதானபிள்ளைகளை அலையவிட்டுங்களுக்கே
இன்பமிகுமென்னைஸ்தி யெல்லாந்தொலைத்தேனே
எள்ளளவாகிலு நன்றியில்லாமற்போச்சுதே.

கிழவி தெம்மாங்கு

குடிக்கக்கஞ்சியில்லாதகுடிகேடாநாய்ப்பயலே[பயலே
இடிக்கப்போறேன் தாடையைப்பார்த்தேதுங்கெட்ட

சிந்து

ஆருக்குன்னுஸ்தியெல்லா மளித்தாயதுவல்லாதே
ஆராலேநீயோட்டாண்டி யானுயதுநீசொல்லடா
ஈரும்பேனும்பிடித்த எருமைக்கடாவே
என்முன்வடாகூடம்பேசாதெடுப்பேன்பழமுறத்தை

டம்பாசாரி தெம்மாங்கு

நான்கொடுத்ததுங்களுக்கு நாலுதலைமுறைக்குண்டே
எந்தனையபகரித்தே இப்படிநீயேசுகிறாய்

சிந்து,

பத்துலட்சம்விலையுள்ள பங்களாகட்டினேன்
பகர்மெத்தையெலாங்குளோப்பு படங்களாயாக்கினே
எத்தனைவிதலஸ்தர்கள் எழிலாகமாட்டினேன்
என்னபட்டுங்குடத்தி லிட்டவிளக்காச்சே

கிழவி தெம்மாங்கு

சிறுக்கிதனைவசப்படுத்த சிந்தைதனிலெண்ணினைபோ
செறிப்பாளோவுந்தனுக்கு செருப்புதின்னநாய்மகனே

சிந்து

தங்கதற்கும்வந்ததற்கும் சரிப்பட்டுப்போச்சுதடா
தலைவாசல்மிதியாமல் தப்பித்துக்கொள்ளடா
சொந்தம்பாராட்டிநின்றால் சுமமாயிரேனினித்
துடைப்பக்கட் டைமுறியும் சொன்னேன்சொன்னேன [டா

தாய்க்கிழவி டம்பனுக்கு திரவியங்
கிடைத்தபின்புவந்துளத்துதல்.

ஆசைமிகுமெனனுடைய அருமைமருமகனே

தேசுலவுமன்மதன்போற் சிறந்தவழகோனே
உத்தமனேசத்தியனே உலகினிற்சீமானே
மெத்தவும்புகழுடைய மேதகுகோமானே
நாற்பதுசென்றக்கால் நாய்க்குணமென்பாரகள்
தோத்திரையான பேய்த்தோஷிநான்தெரியாமல்
மதுவுண்டமயக்கத்தால மதியழிந்துன்னைநான்
இதமில்லாவார்த்தைகள் எத்தனையேபேசிவிட்டேன்
உள்ளமதிலெள்ளளவு முன்னுமெலென்னுடைய
தெள்ளுமணியாமதன சிங்காரசுந்தரியை
நித்தியமும்வைத்திருந்துநித்திலக் கழைச்சிலைக்கொள்
சித்தஜன்செருக்கொழிய சித்தமதில்சற்றுகிருபை
செய்யடாவென்சாமிகண்ணேசெய்யாவிட்டாலெந்தன்
தையலவள்வெயயமாரன் பெய்யுமம்பினால்நொந்து
பாரறியவுன்மீதில் பழிபோடுவாள்சொன்னேன்
சீரிலுயர்ந்திடுசிங்கமே-தங்கமே
தேசம்புகழ்துங்கமே

விருத்தம்

இப்படியெத்தவந்த விதமிலாக்கிழவியோடு
மைப்படிகண்ணாளென்னு மதனசுந்தரியைடம்பன்
ஒப்புக்கொள்ளாமல்நீக்கி யொண்டொடிமனையாளோர்
இப்படிதனிலேமிக்கவிசையொடுவாழ்ந்திட்டானே[டு

மதன்சுந்தரிஓரடிச்சிந்து

முற்றிற்று